# நிதிக்கணக்கீடும் அறிக்கையிடலும்

[AA31]

கூடுதல் அத்தியாயம் 02

# முறைப்படுத்தற் சட்டகம்

# 2. நியதிச்சட்ட விதிமுறைகள்

## 2.9 ஒருங்கிணைந்த அறிக்கையிடல் (IR) (Integrated Reporting)

### 1. ஒருங்கிணைந்த அறிக்கையிடலுக்கான அறிமுகம் (Introduction to Integrated Reporting)

ஒருங்கிணைந்த அறிக்கையிடல் என்பது நிறுவனங்கள் மீதாக உருவாக்கபடும் கூட்டு மதிப்பு மற்றும் நிலைத்தன்மை பற்றிய பரந்த அளவில் அங்கீகரிக்கப்பட்ட செயல்திறன் செயல்முறை ஆகும். இது நிறுவனத்தின் சிந்தனை வழிமுறை, திட்டமிடல் மற்றும் வியாபார அறிக்கையிடல் நடவடிக்கைகள் மீது செல்வாக்கு செலுத்துகின்றது.

**வரைசட்டத்தின் படி :-**

ஒருங்கிணைந்த அறிக்கை என்பது ஒருங்கிணைந்த சிந்தனை மீதாக நிறுவப்பட்ட ஒரு செயல்முறை. இது காலப்போக்கில் நிறுவனத்தின் மதிப்பு உருவாக்கம் பற்றிய, ஒரு காலமுறை ஒருங்கிணைந்த அறிக்கை மதிப்பீடு ஆகவும் மற்றும் நிறுவனத்திற்கு மதிப்பு உருவாக்கும் அம்சங்களைப் பற்றிய தொடர்பாடல் தொடர்பு ஆகும்

**ஒருங்கிணைந்த அறிக்கையிடலின் அடிப்படை நோக்கங்கள் (Key Objectives)**

- மூலதனத்தின் மிகவும் திறமையான மற்றும் உற்பத்தி ஒதுக்கீட்டை செயல்படுத்த நிதி, மூலதன வழங்குநர்களுக்கு கிடைக்கக்கூடிய தரவின் தரத்தை மேம்படுத்துதல்.
- நிறுவன அறிக்கையிடலுக்கு அதிக ஒத்திசைவான மற்றும் திறமையான அணுகுமுறையை வழங்குவதோடு, வேறுபட்ட அறிக்கை தரத்தை ஈர்க்கின்றது. மற்றும் காலப்போக்கில் நிறுவனத்தின் மதிப்பீடு தொடர்பான திறனை பாதிக்கும் முழு காரணிகளையும் தொடர்புபடுத்துகின்றது
- மூலதனத்தின் பரந்த அடிப்படைக்கான(நிதி,உற்பத்தி,மனிதவளம்,இயற்கைவளம் மற்றும் இதர்) பொறுப்புணர்வு மற்றும் நிர்வாகத்திறனை மேம்படுத்தல் மற்றும் அவர்களினது ஒன்றிணைவுகளின் புரிந்துணர்வை மேம்படுத்துதல்.
- நிறுவனத்தின் ஒருங்கிணைந்த சிந்தனை, திட்டமிடல், முடிவெடுத்தல் மற்றும் செயல்திறன் நடவடிக்கைகளுக்கு குறுகிய, நடுத்தர, நீண்ட கால அடிப்படையில் மதிப்பு உருவாக்குவதற்கு ஆதரவுவளித்தல்.

### 2. ஒருங்கிணைந்த அறிக்கையிடல் என்றால் என்ன? (What is an integrated report?)

சர்வதேச ஒருங்கிணைந்த அறிக்கை கட்டமைப்பின் படி, ஒருங்கிணைந்த அறிக்கை எவ்வாறு நிறுவனத்தின் உத்தி, ஆளுமை, செயல்முறை, மூலோபாயம் மற்றும் எதிர்கால வாய்ப்புகள், அதன் பின்னணியில் உள்ள வெளிப்புறச் சூழலில் சுருக்கமாக தொடர்புபட்டுள்ளது மற்றும் நீண்டகால, நடுத்தர, குறுங் காலத்தில் நிறுவனம் மீதான மதிப்பினை உயர்த்திக் கொள்ள வழிவகுக்கின்றது என கூறுகின்றது.

ஒருங்கிணைந்த அறிக்கையிடல் ஆனது எவ்வாறு நிறுவனத்தின் பல்தரப்பட்ட முலதனங்கள் நிறுவனத்தின் மதிப்பு உருவாக்கல் மூலோபாயத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றது என்பதனை விளக்குகின்றது. அத்தகைய ஒருங்கிணைந்த அறிக்கை பாரம்பரிய நிதி மூலதனத்திற்கு அப்பால் மூலதனத்தின் விளக்கத்தை விரிவுபடுத்துகிறது. மேலும் இது பல்வகை மூலதன அணுகுமுறையாக அடையாளம் காணப்படுகின்றது. இயற்கைமூலதனம், சமூக மற்றும் உறவுரீதியானமூலதனம், அறிவுசார்ந்தமூலதனம், மனிதவள மூலதனம், உற்பத்தி மூலதனம், மற்றும் நிதி மூலதனம், என்பன இவற்றுள் அடங்கும்

**சர்வதேச ஒருங்கிணைந்த அறிக்கை கவுன்சில் / சபை (International Integrated Reporting Council (IIRC)**

சர்வதேச ஒருங்கிணைந்த அறிக்கை கவுன்சில் என்பது முதலீட்டாளர்கள், நிறுவனங்கள், நிலையான கட்டமைப்பாளர்கள், கணக்கியல் தொழில் வல்லுனர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களை முறைபடுத்தும் ஒரு உலகளாவிய கூட்டணி ஆகும். கூட்டாண்மை அறிக்கையின் பரிணாம வளர்ச்சியில் அடுத்த கட்டமாக மதிப்பை உருவாக்குதல் பற்றிய தகவலை இக் கூட்டணி ஊக்குவிக்கின்றது.

## 3. ஒருங்கிணைந்த அறிக்கையின் முக்கியத்துவம் (Purpose of the Integrated Report)

ஒரு ஒருங்கிணைந்த அறிக்கையின் பிரதான நோக்கம், ஒரு நிறுவனமானது காலப்போக்கில் மதிப்பை எவ்வாறு உருவாக்கின்றது என்பதை நிதி மூலதன வழங்குபவர்களுக்கு விளக்குகின்றது. ஒருங்கிணைந்த அறிக்கை ஆனது ஊழியர்கள்,வாடிக்கையாளர்கள், வழங்குநர்கள், வணிகபங்காளிகள், உள்ளுர்சமூகங்கள், சட்டமன்றஉறுப்பினர்கள், கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் கொள்கைவகுப்பாளர்கள் ஆகியோர்களுக்கு, காலப்போக்கில் நிறுவனம் மீது மதிப்பை உருவாக்குவதற்கு, அந்த நிறுவனத்தின் திறனுடன் ஆர்வமுள்ள அனைத்து பங்குதாரர்களுக்கும் பயனளிக்கும் ஒரு அறிக்கையாகும்.

## 4. ஒருங்கிணைந்த அறிக்கையின் அடிப்படை கூறுகள் (Key Components of an Integrated Report)

ஒரு ஒருங்கிணைந்த அறிக்கை எட்டு அடிப்படைக் கூறுகளை உள்ளடக்கமாக கொண்டுள்ளது. அவை மூலாதாரமாக ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவையாகவும். ஆனால் பரஸ்பரமாக பிரத்தியேகப்பட்டதாகவும் காணப்படுகின்றது.

**1. வியாபார மாதிரிபடிவம் :**

<u>அடிப்படை தளம் :</u>

- ஒரு நிறுவனத்தின் நோக்கம் மற்றும் இலக்கு
- ஒரு நிறுவனத்தின் கட்டமைப்பு, வியாபார நடவடிக்கைகள் மற்றும் செயன்முறைகள்
- ஒரு நிறுவனத்தின் அடிப்படை உள்ளீடுகளும் அதன் பெறுபேறுகளின் வெளியீடுகளும் மற்றும் வெளிப்பாடுகளும்
- ஒரு நிறுவனத்தின் கட்டமைப்பு குறிக்கோள்கள்,அடிப்படை இடர்பாடுகள் மற்றும் வாய்ப்புகள்
- ஆறு வகையான எல்லா மூலதனங்களும்

வியாபார மாதிரி படிவங்கள் நிறுவனத்தின் தனிப்பட்ட சிறப்பு தன்மைகளுக்கும், வியாபார பிரிவுகளுக்கும் ஏற்ப வேறுபட்டதாக காணப்படும், ஆகையால் நிறுவன கருத்திற்குகமைவாக வேறாக சமர்ப்பிக்கபடும்.

**2. வியாபாரத்தின் கண்ணோட்டம் மற்றும் வெளிப்புறச் சூழல் :**

<u>அடிப்படைத் தளம் :</u>

<u>வியாபாரத்தின் கண்ணோட்டம்</u>

- உரிமையாண்மை மற்றும் கட்டமைப்பு நடவடிக்கைகள்
- அடிப்படை கொள்கை நடவடிக்கைகள் மற்றும் வணிக சந்தை
- வணிக சந்தையின் நிலைப்பாடு
- அடிப்படைஅளவுத்திறன் தரவுகள்(உ+ம் :- வருமானம், ஊழியர் எண்ணிக்கை)

FAR

Association of Accounting Technicians of Sri Lanka

<u>வெளிப்புறச் சூழல்</u>

- சட்டரீதியான தேவைப்பாடும் மற்றும் முதன்மை பங்குதாரர்களின் அக்கறையும்
- பருவின மற்றும் நுண்ணிய பொருளியல் வரையறைகள்
- வணிக சந்தையின் நோக்கு(போட்டியாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் தேவைகளின் பலமும், பலவீனங்களும்)
- தொழில்நுட்ப மாறுதலின் விளைவுகள்
- பௌதீக சூழலின் சவால்கள்
- நிறுவனம் நடைமுறைபடுத்தும் சட்ட உரிமங்கள் மற்றும் சூழல் ஒழுக்க விதிமுறைகளும்
- நாட்டின் அரசியல் சூழ்நிலைகள்

**3. மூலதன முகாமைத்துவம்**

<u>அடிப்படைத் தளம் :</u>

- இலக்குகள், இடர்பாடுகள் மற்றும் வாய்ப்புகளுக்கான அளவுத்திறன், வழிக்காட்டல்கள்
- நிறுவனத்தின் நேர் மற்றும் எதிர்மறை விளைவுகள்
- நிறுவனத்தின் கடந்தகால மற்றும் நிகழ்கால செயற்பாடுகளுக் இடையேயான இணக்கப்பாடுகள் மற்றும் நிறுவனத்தின் வெளித்தோற்றமும் நிகழ்கால செயற்பாடுகளும்
- அடிப்படை செயற்திறன் வழிக்காட்டல்கள் (KPIs)
- எவ்வகையான சந்தர்ப்பங்கள், செயல்திறன் விதிமுறைகளில் குறிப்பிடத்தக்க விளைவை ஏற்படுத்தும்.

**4. பங்குதாரர்களின் உறவுமுறைகள்**

<u>அடிப்படைத் தளம் :</u>

- எவ்வாறு நிறுவனம் பங்குதரர்களை இனங்காண்பது
- பங்குதாரர்களின் தொழில் நுட்ப ஈடுபாடு
- பங்குதாரர்களின் முக்கிய நடவடிக்கைகளை இனங்காணல்
- வியாபார மாதிரி மீதான பங்குதாரர்களின் ஈடுபாடு, கணீப்பீடு பற்றிய மதிப்பீடுகள், கண்ணோட்டம் மற்றும் செயல்விளைவுகள்.

**5. மூலோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு**

<u>அடிப்படைத் தளம் :</u>

- நிறுவனத்தின் நீண்ட கால நடுத்தர குறுங்கால மூலோபாய நோக்கங்கள்
- பரந்த சந்தையில் நிறுவனத்தின் நிலைப்பாடு என்ன?
- நீண்ட கால மூலோபாய நடவடிக்கைகள், குறுங்கால வியாபார மாதிரியுடன் எவ்வாறு தொடர்புபடுகின்றது.
- வள ஒதுக்கீடுத் திட்டம்
- எவ்வாறு சாதனையும் மற்றும் இலக்குகளையும், நீண்டகால, நடுத்தர, குறுகிய காலப்பகுதியில் அளவிடுதல்.
- இலக்குகள் மீதான மூலோபாய செயற்பாடுகள்

**6. வெளித்தோற்றம்**

அடிப்படைத் தளம் :

- நிறுவனத்தின் வெளிப்புறச் சூழலை பற்றிய எதிர்பார்புகள் மற்றும் சவால்கள்
- அவை எவ்வாறு நிறுவனத்தில் தாக்கத்தினை உருவாக்கின்றன
- ஒரு நிறுவனம் எதிர்காலத்தில் எதிர்நோக்கவிருக்கும் நெருக்கடியான வணிக சவால்கள் மற்றும் நிச்சயமற்ற தன்மைகளை, சாத்தியமான தாக்கங்களாக மாற்றிக்கொள்ளுவதற்கு எவ்வாறு நிகழ்காலத்தில் தன்னை தயார்படுத்திக்கொள்ளும்.

**7. ஆளுமை**

அடிப்படைத் தளம் :

- நிறுவனத்தின் தலைமைத்துவ கட்டமைப்பு
- நிறுவனம் தன்னிச்சையான மற்றும் கடமைப்பாடு உடைய கூட்டு ஆளுமை செயல் விதித் கோவையை உருவாக்கல்.
- நிறுவனத்துக்குரிய ஒழுக்க விதி நடைமுறைகளை அமுல்படுத்துதல்
- தனிச்சிறப்புவாய்ந்த செயன்முறைகளை உபயோகித்து நிறுவன கட்டமைப்பு முடிவுகளை அமுல்படுத்தி, அவற்றை விரிவுபடுத்தி, மேற்பார்வை செய்வதன் மூலம் அவை நிறுவன கூட்டு ஆளுமை செயல் விதித் கோவையுடன் உடன்படுகின்றதா? என கண்காணித்தல்.

**8. முகாமைத்துவ இடர்பாடு மற்றும் உள்ளக கட்டுப்பாடு**

அடிப்படை தளம் :

- குறிப்பிட்ட வாய்ப்புகளுக்கான மூலம் இடர்பாடுகள்.
- நிறுவனத்தின் மதிப்பீடு தொடர்புடைய வாய்ப்புகள் மற்றும் இடர்பாடுகளும்.
- அடிப்படை இடர்பாடுகளை தவிர்பதற்கான எடுக்கப்படும், தனிச்சிறப்புவாய்ந்த படிமுறைகள்.
- உள்ளக கட்டுபாடுகளின் செயல்திறன் பற்றிய அறிக்கையும், பங்குதாரர்களின் வட்டியினை பாதுகாத்துக் கொடுக்கவேண்டி, இயக்குனர் சபைக்கு உள்ளக கட்டுபாடு மீது உள்ள பொறுப்புணர்வு மற்றும் கடமைப்பாடும்

## 2.10 நிலைத்தன்மை அறிக்கையிடல் - அறிமுகம் (Introduction To Sustainability Reporting)

நிலைத்தன்மை அறிக்கை என கருதப்படுவது ஒத்திசைவான பிற விதிமுறைகளை கொண்ட நிதிசாராத அறிக்கையிடல். மற்றும் மும்மடங்கு அறிக்கையிடல், கூட்டு சமூக பொறுப்புணர்வு அறிக்கையிடல், என பலவகை ஆகும். இது ஒருங்கிணைந்த அறிக்கையிடலின் முக்கிய உயிர்க்கூற்று மூலகமாக காணப்படுகின்றது, மற்றும் இவ் அறிக்கை நிறுவனத்தின் சமீபத்திய நிதிசார்ந்த, நிதிசாராத வளர்ச்சி பற்றிய பகுப்பாய்வுகளை இணைக்கின்றது.

FAR
Association of Accounting Technicians of Sri Lanka

## 1. நிலைத்தன்மை அறிக்கையிடல் என்றால் என்ன? (What is a sustainability report?)

நிலைத்தன்மை அறிக்கையிடல் என்பது தினசரி நடவடிக்கைகள் காரணமாக பொருளாதார சுற்றுச்சூழல் மற்றும் சமூக விளைவுகள் பற்றி ஒரு நிறுவனம் அல்லது அமைப்பு வெளியிடும் அறிக்கையாகும். நிலைத்தன்மை அறிக்கை மேலும் நிறுவனத்தின் மதிப்புக்கள் மற்றும் ஆளுமை மாதிரி, மூலோபாயம் மற்றும் நிலையான உலகப் பொருளாதாரம், மற்றும் அதன் அர்ப்பணிப்புக்கும் இடையிலான இணைப்பை நிரூபிக்கின்றது.

நிலைத்தன்மை அறிக்கையிடல் ஆனது ஒரு நிறுவனத்தின் அறிக்கையிடலின் போது, அவ் அமைப்பின் நேர் மற்றும் எதிர்மறை பங்களிப்புக்கள் உள்ளடக்கிய பேண்தகைமை செயல்திறன் உடைய, சமநிலை மற்றும் நியாத்துவத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அறிக்கையினை வழங்க வேண்டும்.

இது நிறுவனங்கள் அவர்களின் பொருளாதார சுற்றுச்சூழல் மற்றும் சமூக நிலை பற்றி புரிந்து கொள்ளவும், ஆளுமை செயல்திறனைப் பரிமாறவும் மற்றும் இலக்குகளை அமைத்து மேலும் திறம்பட மாற்றங்களை நிர்வகிக்க உதவுகின்றது.

நிலைத்தன்மை அறிக்கை என்பது பொருளாதார, சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுமை, செயல்திறன் பற்றிய தகவலை வழங்கும் ஒரு நிறுவன அறிக்கையாகும்.

## 2. நிலைத்தன்மை அறிக்கையிடலின் முக்கியத்துவம் (Purpose of the Sustainability Report)

நிலைத்தன்மை அறிக்கையிடலின் முக்கிய நோக்கம் ஆனது பங்குதாரர்களுக்கு நிறுவனத்தின் கடந்த கால செயல்திறன் ஆளுமை நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை வழங்குவதற்காகவும் மற்றும் எதிர்கால சுற்றுச்சூழல் மற்றும் சமூக நிலை பற்றிய கருத்தினை மதிப்பிடு செய்வதற்கும் உதவுகின்றது.

நிலைத்தன்மை அறிக்கை ஒரு குறித்த நோக்கத்திற்காக IR செயல் முறை மூலம் அறியப்பட்டது

இது பின்வரும் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகின்றது.

1. குறீயீட்டுமதிப்பீடு (BenchMarking) மற்றும் சட்டவிதிகள், தரநிலைகள் மற்றும் தன்னார்வ முயற்சிகள் தொடர்புடைய நிலைத்தன்மை செயல்திறன்களை மதிப்பிடுதல்.
2. நிறுவனங்களின் செல்வாக்கு எவ்வாறு அதன் எதிர்கால நிலையான வளர்ச்சி மீது செல்வாக்கு செலுத்துகின்றது என்பதை விளக்குகின்றது.
3. நிறுவனங்கள் தங்கள் நிறுவனங்களுக்கு உள்ளேயும், பிற வெளி நிறுவனங்கள் உடனும், நிறுவன செயல்திறன்களை ஒப்பீடு செய்தல்.